# இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | **நிதிப்பிரமாணம்** | |
| | நி.பி. 1645 | சபைக்குச் சொந்தமான 4 மோட்டார் வாகனங்களுக்காக சம்பவக் குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான முறையான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம் | சபையினால் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.2.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களை மீளாய்வுசெய்யும் செயற்பாட்டை வெளித் தரப்பினர்களுக்குக் கையளித்தல்

சபை தாபிக்கப்பட்ட நோக்கத்தின் பிரகாரம் அதன் உத்தியோகத்தர்களினால் நேரடியாகச் செய்ய வேண்டிய நிதிக் கூற்றுக்களை மீளாய்வுசெய்யும் செயற்பாடு திறைசேரியின் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினர்களுக்கு கையளிக்கப்பட்டு அதற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 2,130,000 ரூபா 2,490,000 தொகைகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் சம்பள அதிகரிப்பு

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2000 சனவரி 11 அந் திகதிய பீஎப்/பீஈ 5 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபம் என்பவற்றின் பிரகாரம் திறைசேரியினால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் தமது கட்டுப்பாட்டுச் சபைகளின் அங்கீகாரத்துடன் நியதிச் சட்ட சபைகள் தங்களின் ஊழியர்களுக்குச் செலுத்த முடியுமென காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களின் சம்பளம், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டு 2011 ஏப்ரல் தொடக்கம் மாதமொன்றிற்கு ரூபா 30,000 இனாலும், ரூபா 9,800 இனாலும் மற்றும் ரூபா 1,100 இனாலும் அதிகரிக்கப்பட்டிருந்தன. இந்நிலைமை தொடர்பாக முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்கான அரச மானியம் (சீராக்கப்பட்டவை) மற்றும் மீண்டெழும் செலவினம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **விடயம்** | **மீளாய்வாண்டு** | **முன்னைய ஆண்டு** | **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சாதகம் (பாதகம்) சதவீதத்தில்** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| அரச மானியம் (சீராக்கப்பட்டவை) | 43,178,222 | 36,800,894 | 17.32 |
| மொத்த மீண்டெழும் செலவினம் | 41,914,896 | 35,833,155 | (16.97) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

குறித்த வியாபார முயற்சிகளின் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்வதற்காக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபை உருவாக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த கடமைகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் போதியளவில் இல்லாதிருந்தமை முன்னைய சில வருடங்களின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டன.

(அ) 2009 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான செயலாற்றல்களின் செயல்முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| | -------- | -------- | -------- | -------- |
| ஆண்டின் போது கிடைக்கப் பெற்ற ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கை | 1,443 | 1,716 | 1,250 | 1,391 |
| மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கை | 302 | 213 | 211 | 156 |
| மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டறிக்கைகளின் அளவானது மீளாய்வு செய்ய வேண்டிய ஆண்டறிக்கைகளின் எண்ணிக்கையின் சதவீதமாக | 21% | 12% | 17% | 11% |
| மீளாய்வுச் செயற்பாட்டிற்காக பங்குபற்றிய தொழில்நுட்ப பதவியணியினர் | 6 | 6 | 5 | 4 |
| ஆண்டின் போது ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை | 50 | 35.5 | 42 | 39 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்யும் செயற்பாட்டிற்காக வெளிநபர்களின் (மீளாய்வாளர்கள்) உதவி பெறப்பட்டிருந்தது. அந்த ஆண்டுகளில் மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் எண்ணிக்கை முறையே 213 மற்றும் 302 ஆக இருந்தது. அதில் நிதிக்கூற்றுக்கள் முறையே 175 மற்றும் 216 அல்லது 82 சதவீதம் மற்றும் 72 சதவீதமானவற்றின் அடிப்படை மீளாய்வு நடவடிக்கைகள் வெளி நபர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டின் போது இலங்கை கணக்கியல் நியமங்களுக்கு இணங்காத 61 சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 59 சந்தர்ப்பங்கள் அல்லது 97 சதவீதம் வெளிநபர்களினால் அடிப்படை மீளாய்வை மேற்கொள்ளும் போது இனங்காணப்பட்டிருந்தது. சபையினால் இந்த அடிப்படை மீளாய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 2,490,000 தொகை அவர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களை சபைக்குச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) சபைக்கு கிடைக்கின்ற நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல் தவிர நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காத நிறுவனங்களை இனங்கண்டு உரிய அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வருடாந்த நிதிக்கூற்றுக்களை சபைக்குச் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் தொடர்பாக தண்டப் பணத்தை விதிப்பதற்காக அதிகாரச்சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக 2010 செப்தெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு சபைக்கு கட்டளையிட்டிருந்த போதிலும் 2013 மே 12 ஆந் திகதி வரையிலும் உரிய திருத்தங்களைச் செய்தற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

திறைசேரியினால் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக வழங்குகின்ற நிதியேற்பாட்டினை அந்தந்த செலவினத் தொகுதிகளுக்காக மாத்திரம் ஈடுபடுத்த வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் மீண்டெழும் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 37,240,000 தொகையிலிருந்து ரூபா 1,232,662 தொகை மூலதனச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் மூலதன செலவினத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 169,000 தொகையான நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 30,664 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

1999 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை சபைக்குக் கிடைத்திருந்த சகல நிதிக்கூற்றுக்களையும் 6 மாத கால எல்லையில் ஸ்கேன் செய்து பூர்த்தி செய்வதற்காக மாதமொன்றிற்கு ரூபா 42,000 கட்டணம் செலுத்துவதற்கு உடன்பட்ட வெளியார் கம்பனி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் உடன்படிக்கைக் கால எல்லையில் உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையினால் இரண்டாவது தடவையாகவும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அக்காலமும் கடந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கப்படவில்லை.

இதற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 191,626 மற்றும் ரூபா 388,188 தொகைகள் மேற்கூறப்பட்ட கம்பனிக்குச் செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களை விட ரூபா 291,928 மேலதிகத் தொகையினை சபை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

**3.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள்**

(அ) சபையினால் செலுத்தப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2009 சனவரி 17 ஆந் திகதிய எம்எப் 2/4/எஸ்எல்ஏஏஎஸ்எம்பீ/ஜீஈஎன் ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பப்பட்டிருந்த கடிதத்தின் (v) ஆம் பந்தியின் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற மாதிரி முறைமையில் கணக்குகளைப் பரீட்சித்தல் முறைமைக்குப் பதிலாக சகல தனியார் நிறுவனங்களினதும் கணக்கு அறிக்கைகளைப் பரீட்சிக்கும் முறைமையொன்றை ஏற்படுத்தி அதன் பிரகாரம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு உத்தேசத் திட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாகவும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டு தயாரிக்கப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையை பயன்படுத்தி 2012 ஆம் ஆண்டின் 6 மாத காலத்திற்காக ரூபா 1,950,000 தொகை ஊக்கவிப்புக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக வழமையான கடமைகளின் போது செய்யப்படுகின்ற வேலை அளவினை விட கூடுதலான செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த 302 நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்தல் மற்றும் 50 கணக்காய்வு கோவைகளை மீளாய்வு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளிலிருந்து அடையப்பட்ட இலக்குகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையைத் தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்யக் கூடிய வகையிலும் அவர்களைக் கவரும் வகையிலும் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் சபையின் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமை அதற்கு முரணாக தயாரிக்கப்பட்டிருந்தது என்பது பின்வரும் விடயங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

- ஊக்குவிப்புக் கொடுப்பனவாக நிலையான தொகை சகல நபர்களுக்கும் வழங்கப்படுகின்றமை.

- ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் தொடர்பாக தனிப்பட்ட செயல் முன்னேற்றங்களை சரியாகத் தயாரிக்கப்படாமை.

- ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய இலக்குகள் இனங்காணப்படாமை.

(ஆ) உத்தியோகபூர்வ வாகனம் உரித்தான சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு 2011 திசெம்பர் 07 தொடக்கம் 2012 ஏப்ரல் 11 வரை பிரசவ விடுமுறை பெற்றிருந்த கால எல்லைக்காக மாதத்திற்கு ரூபா 12,500 படி எரிபொருள் படி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் 2012 யூலை 30 தொடக்கம் 2012 நவம்பர் 20 வரை பிரசவ விடுமுறை பெற்றிருந்த காலத்திற்காக வாடகை அடிப்படையில் பெற்ற மோட்டார் வாகனத்திற்காக மாதமொன்றிற்கு ரூபா 44,800 படி வாடகையும் மாதமொன்றிற்கு ரூபா 12,500 படி எரிபொருள் படியாக ரூபா 210,100 கூட்டுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பூர்த்தியான தொழில்தகைமையுடைய பட்டயக் கணக்காளர்கள் தொடர்பான தகவல் முறைமையொன்று காணப்படுவதுடன் தேவையான எந்த வேளையிலும் தேவையான தகவல்களைப் பெறும் இயலுமை சபையிடம் காணப்படுகின்றது. இதன் காரணமாக சகல பட்டயக் கணக்காளர்களுக்காக மின் அஞ்சல்

மூலம் அல்லது அச்சிடல் பிரசுரங்களின் மூலம் தகவல் தொடர்புகளைச் செய்யக்கூடியதாக இருந்தது. அதன் பிரகாரம் சபையின் வெற்றிட பதவியை நிரப்புவதற்காக விண்ணப்பங்களைக் கோருவதற்குரிய 2,500 அச்சிடல் பத்திரங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள பட்டயக் கணக்காளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக மின்அஞ்சல் மூலமும் உரிய தகவல் தொடர்புகளை செய்ய முடியுமாக இருந்த போதும் அவ்வாறு செய்யாமல் சபையினால் 7 ஆங்கில பத்திரிகைகளில் ரூபா 1,669,555 தொகையான அதிக செலவு செய்து வெற்றிடம் தொடர்பான அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் மும்மொழிக் கொள்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் பிரதான நிறைவேற்றுப் பதவியான பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் - தொழில்நுட்பம் என்ற 2 பதவிகளுக்காக 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் அவர்களின் ஒப்பந்தக் காலம் முடிவடைந்திருந்தது. அத்திகதி தொடக்கம் 2013 மே 12 வரை முறையான நியமனம் வழங்கப்படாமல் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

"அந்த நியமனங்கள் பணிப்பாளர் சபையினால் 2012 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி நடந்த கூட்டத்தின் போது நீடிக்கப்பட்டிருந்தமையினால் அது செல்லுபடியானது என்பது எங்களது கருத்தாகும்" என சபையின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு மற்றும் கண்காணிப்பு நிர்வாகத்திற்காக பிரதி பணிப்பாளர் நாயகம் பதவி உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவி 1998 ஆம் ஆண்டு தொடக்கம் அதாவது 15 வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதனை நிரப்புவதற்காக இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் நிதிக்கூற்றுக்களின் மீளாய்வை கண்காணிப்பதற்கும் கணக்காய்வை கண்காணிப்பதற்கும் இரண்டு

பிரதி பணிப்பாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவிகளை நிரப்புவதற்காக 2013 மே 12 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சபையின் அடிப்படைச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் பதவிகளில் வெற்றிடம் காணப்படுதல் செயல்முன்னேற்றங்களில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(இ) உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்காக உயர் முகாமைத்துவத்தைச் சார்ந்த பதவிகளில் நிரந்தரமாக சேவையில் ஈடுபடுபவர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக 25% விசேட படி மற்றும் மேலதிக நலன்களை வழங்குமாறும் அவ்வாறு சேர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தால் இணங்கப்பட்ட சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளுமாறும் நிதி அமைச்சு ஆலோசனை வழங்கியிருந்தது. எனினும் 2013 மே 31 வரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாகிய 14 பதவிகளில் 05 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஈ) 2011 ஏப்ரல் 21 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ1/4/6/11 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட பதவியணியினரை அங்கீகரிக்கும் கடிதத்தின் பிரகாரம் உதவி தொழில்நுட்ப முகாமையாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் சபையினால் அப்பதவிக்காக 2013 ஆம் ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(உ) சபையில் நிரந்தர சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உதவி நிதி மற்றும் நிருவாக முகாமையாளர், நிரந்தர தொழில் முயற்சிகள் கட்டுப்பாட்டாளர், செயலாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் போன்ற பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்புக்களை வழங்குதல் முறைப்படியாக இடம்பெற்றிருக்கவில்லை.

(ஊ) 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 88 ஆவது பந்தியின் பிரகாரம் சகல அரசாங்க ஊழியர்கள் தொடர்பாகவும் பிரத்தியோக கோவை பேணப்பட வேண்டியிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பான விபரம் அந்த வர்த்தமானியின் 87 மற்றும் 88 ஆவது பந்திகளில் காண்பிக்கப்பட்டிருந்தன. எனினும் சபையின் உத்தியோகத்தர்களின் பிரத்தியேக கோவைகளில் தேவையான சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டிற்காக நிதியமொன்றை உருவாக்குதல்**

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ஊழியர் பணிக்கொடைக்காக ரூபா 3,979,293 தொகை சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான நிதியமொன்றைக் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல் ஆளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகரித்து நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்று அடுத்துவரும் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 தினங்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது 3 மாத தாமத்தின் பின்னர் அதாவது 2013 மார்ச் 12 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் அமுல்படுத்த முடியாதிருந்த செயற்பாடுகளை இனங்கண்டு தேவையான திருத்தங்களைச் செய்து வருடாந்த கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்டு எதிர்வரும் வருடங்களுக்காக மிகவும் சிறந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும் சபையினால் 2012 ஆம் ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2011 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரதி என உரிய அறிக்கையை ஒப்பிட்ட போது வெளிப்படுத்தப்பட்டது. கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்தல் சரியான முகாமைத்துவம் மற்றும் சபையின் செயலாற்றலை அதிகரிக்கக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) சபைக்குச் சொந்தமான நிகழ்கால வளங்களின் கீழ் மனித வளம் மற்றும் முகாமைத்துவ திறன் தொடர்பான தகவல்கள்.

(ii) தொடர்ச்சியான 3 வருட செயற்பாட்டு பெறுபேறுகளின் கீழ் 2011 ஆம் ஆண்டிற்குரிய தகவல்கள்.

**4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

(அ) சபையினால் ஆண்டின் போது நிறைவேற்ற வேண்டிய சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த செயற்பாடுகள் ஆண்டின் எக்காலப் பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டியது மற்றும் அதனை நிறைவேற்றுதல் தொடர்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் யார் என்பது தொடர்பாக காண்பிக்கப்பட வேண்டும். இருந்த போதிலும் சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருகக்வில்லை. மேலும் கூட்டிணைந்த திட்டத்தில் 2012 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் (இல. 2 தொடக்கம் 9 வரை) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது ஆண்டினை மாத்திரம் திருத்தம் செய்து முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரதியாக இருந்தமை அறிக்கைகளை ஒப்பிட்ட போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வுக் கம்பனிகள் தமது கணக்காய்வு நடவடிக்கைகளை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்கின்றதா என பரீட்சித்தல் சபைக்கு கையளிக்கப்பட்ட செயற்பாடாக இருந்ததுடன் 2012 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை 50 ஆக இருந்த போதிலும் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் அதன் எண்ணிக்கை 30 ஆக இருந்தது.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

(அ) நி.பி 134(2) இன் பிரகாரம் தனியார் கணக்காய்வுக் கம்பனியினால் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வாறே நி.பி 134(3) இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உரிய கணக்காய்வுக் கம்பனியினால் 2012 இன் முதல் அரையாண்டிற்குரிய வரைவு அறிக்கை 2012 நவம்பர் 26 இல் சபையின் முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பாக சபையினால் விடயங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டு முடிவடைந்து 6 மாத காலம் கடந்திருந்த போதிலும் இரண்டாவது அரையாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டிற்காக கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டு கூட்டங்கள் உள்ளகக் கணக்காய்வாளரின் தலைமையில் நடாத்தப்பட்டிராததுடன் அவதானிப்பாளராகப் பங்குபற்றுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1.3 ஆம் பந்தியின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அடுத்துவரும் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு ஆகக் குறைந்தது 15 தினங்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது 3 மாத தாமத்தின் பின்னர் அதாவது 2013 மார்ச் 12 ஆந் திகதியே அது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) ஆண்டிற்காக பாதிடப்பட்ட வருமானம்

(ii) ஆண்டின் இறுதியில் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை

(iii) ஆண்டிற்கான நிதிப்பாய்ச்சல் கூற்று

(இ) பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய வகையில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) பதவியணியினர் நிருவாகம்

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(உ) சில்லறைக் காசு முகாமைத்துவம்